<u>இ.ம.எண்.07/2023</u>
<u>அ.வ.எண்.116/2023</u>
<u>நாள்.10.11.2023</u>

(i) மனுதாரர் செயலுறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கில் தாவா சொத்தில் "A" செட்யூலில் குறிப்பிட்டுள்ள இரு அயிட்ட சொத்துகளையும் இணைக்கும் பொது தடமானது 1ம் எதிர்மனுதாரரின் பாக நிலத்தில் உள்ளது. 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர் பல வருடங்களாக பயன்படுத்தி வந்த பொது தடத்தை மறைத்து டிராக்டர் கொண்டு உழவு செய்து அழித்துவிட்டார் என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர் பயன்படுத்திய பொது தடத்தினை அழித்து விட்டதாலும், மனுதாரருக்கு சொந்தமான "B" செட்யூல் தாவா சொத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்து கிணறு தோண்டி அதற்கு மின் இணைப்பு பெற முயற்சிப்பதால் மேற்படி ஆணையரை நியமித்து தாவா சொத்தை அளவீடு செய்து 4புற எல்லைகளை நிர்ணயம் செய்து கொடுக்குமாறும், மேலும் நில அமைப்புகளை ஆராய்ந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் தாவா "A" செட்யூல் சொத்தில் பொதுத்தடம் ஏதேனும் அமைந்துள்ளதா? என்பது குறித்தும், தாவா "B" செட்யூல் சொத்தில் 1ம் எதிர்மனுதாரரால் ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்தும், அவற்றின் அமைப்பு மற்றும் அளவுகள் குறித்தும், அவ்வாறு ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் ஆக்கிரமிப்பின் அளவுகள் குறித்தும் நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கினை தீர்மானிக்க உதவும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.V.ரணதேவ் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர், தாவா சொத்துகளை பார்வையிட்டு அதனை தல ஆய்வு செய்து, தாவா சொத்துகளின் பௌதீக தன்மைகள் குறித்து ஆய்வு செய்து, தாவா "A" செட்யூல் சொத்தில் உள்ள இரண்டு தாக்குகளிலும்

பொதுத்தடம் ஏதேனும் அமைந்துள்ளதா? என்பது குறித்தும், அவ்வாறு பொதுத்தடம் அமைந்துள்ளது எனில் அதன் அமைப்பு, அளவுகள் மற்றும் நீள, அகலங்கள் குறித்தும், தாவா "B" செட்யூல் சொத்தில் ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்தும், அவ்வாறு ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் ஆக்கிரமிப்பின் அளவுகள் குறித்தும், அவற்றின் அமைப்பு மற்றும் நீள, அகலங்கள் குறித்தும், நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை கொண்டு அளந்து, அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.7500/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து ஒருவார காலத்திற்குள் (16.11.2023 அன்றோ அல்லது அதற்கு முன்போ) செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு தாவா சொத்துகளை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இயன்ற அளவு காலதாமதமின்றி எதிர்வரும் 30.11.2023ம் தேதிக்குள் விரைவாக அறிக்கை தாக்கல் செய்வதற்கு ஆவண செய்ய அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இருதரப்பினரும் நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிட நிர்ணயித்துள்ள தேதியில் நீதிமன்ற ஆணையருக்கு தங்களின் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.30.11.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஓம்/-திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.